## கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

# கூட்டுறவு

கொள்கை விளக்கக் குறிப்பு

2021–2022

மானியக் கோரிக்கை எண் : 12


## இ. பெரியசாமி

கூட்டுறவுத் துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2021

# பொருளடக்கம்


| இயல் எண். | தலைப்பு | பக்கம் எண். |
| --- | --- | --- |
| | முன்னுரை | 1–4 |
| I | கூட்டுறவுக் கடன் அமைப்பு | 5–47 |
| II | கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 48–70 |
| III | நுகர்வோர் கூட்டுறவுகள் | 71–80 |
| IV | சிறப்பு நோக்கங்களுக்கான கூட்டுறவு நிறுவனங்கள் | 81–87 |
| V | பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு | 88–99 |
| VI | கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி | 100–108 |
| VII | ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் | 109–113 |
| VIII | கூட்டுறவுத் தேர்தல் | 114–117 |
| IX | விலை நிலை நிறுத்தும் நிதி | 118–119 |
| | முடிவுரை | 120 |

# முன்னுரை

1. நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய பங்கு வகிப்பதால், அவை நமது நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகின்றன. உலகிலேயே மிகப்பெரிய சமூகப் பொருளாதார இயக்கமான கூட்டுறவு இயக்கம், நாட்டில் வறுமையை ஒழிக்கவும், உற்பத்தியுடன் இணைந்த வேலை வாய்ப்பினை உருவாக்குவதிலும், சமூக ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றி வருகிறது,

2. கூட்டுறவு இயக்கத்தை பொருத்தவரை தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக உள்ளது. திருவள்ளூர் மாவட்டம், திரூரில் 1904ஆம் ஆண்டு நாட்டிலேயே முதல் கூட்டுறவு சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அதே ஆண்டில் திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கமும், பெரிய காஞ்சிபுரம்

கூட்டுறவு நகர வங்கியும் தமிழ்நாட்டில் துவங்கப்பட்டது.

3. வேளாண் உற்பத்தியை அதிகரிக்க பயிர்க்கடன், அதிலும் உரிய காலத்தில் கடனை திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க்கடன், விவசாய பெருமக்கள் வாழ்வாதாரத்தை பெருக்கிட வேளாண் சார்ந்த முதலீட்டுக் கடன், வேளாண் பொருட்களை பாதுகாத்திட ஊரக கிடங்கு, உரம், விதை மற்றும் வேளாண் கருவிகள் வழங்குதல் என வேளாண் வளர்ச்சிக்கு உறுதுணை புரிவதில் கூட்டுறவுச் சங்கங்கள் இம்மாநிலத்தில் முக்கிய பங்காற்றியுள்ளது.

4. மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அவர்களால் விளைவிக்கப்படும் சாமை, வரகு, புளி மற்றும் தேன் போன்ற பொருட்களுக்கு இலாபகரமான விலை கிடைப்பதை உறுதி செய்ய கூட்டுறவு நிறுவனங்கள் உதவுகின்றன. அவ்வாறு விளைவிக்கப்படும் பொருட்களைப் பொது

வணிக முத்திரையிட்டுச் சந்தைப்படுத்தி வருவதற்கு அக்கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிதியுதவியும் அளிக்கப்படுகிறது.

5. அறுவடைக்காலங்களில் விவசாயிகள் தங்களது விளைப்பொருட்களை சேமித்து வைக்கவும், குறைந்த விலையில் விற்பனை செய்வதை தவிர்க்கும் பொருட்டு, இம்மாநிலம் முழுவதும் வெவ்வேறு நிலைகளில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கு 5,10,600 மெ.டன் கொள்ளளவு கொண்ட 3,879 கிடங்குகள் கட்டப்பட்டு உள்ளன.

6. கூட்டுறவுச் சங்கங்கள் 33,068 நியாயவிலைக் கடைகளை பொது விநியோகத் திட்டம் மூலம் செயல்படுத்துவதில் முக்கிய பங்காற்றி வருகின்றன. 2,13,00,000 குடும்ப அட்டைதாரர்களுக்கு இந்த நியாய விலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் இந்த கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும்


நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும் சிறப்பு பொது விநியோக பொருட்களான துவரம் பருப்பு, பாமாயில் ஆகியவையும் மேற்சொன்ன கடைகள் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன. கொரோனா சிறப்பு நிவாரண நிதியாக ரூ.4,000/- ஒவ்வொரு அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் இரு சம தவணைகளில் மே மற்றும் ஜுன் 2021 ஆகிய மாதங்களில் வழங்கப்பட்டது. இவை தவிர, 14 மளிகை பொருட்கள் அடங்கிய ஒரு தொகுப்பையும் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு இந்த நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டது.

# இயல் – I
# கூட்டுறவுக் கடன் அமைப்பு

1.1 கூட்டுறவுக் கடன் அமைப்பு மாநிலம் முழுவதும் பரந்து காணப்படும் மிகப்பெரிய நிறுவன கடன் வழங்கும் அமைப்பாகத் திகழ்கிறது. கடன் கூட்டுறவு நிறுவனங்கள் தனது உறுப்பினர்களையே உரிமையாளராகக் கொண்டு மக்களாட்சி முறையில் நிர்வகிக்கப்பட்டு வரும் நிதி நிறுவனங்களாகும். வைப்புகள், கடன்கள் மற்றும் பணப்பரிமாற்றம் போன்ற நிலையான வங்கியியல் சேவைகளை அளிப்பதுடன், கிராமப்புறங்களில் வேளாண் இடுபொருட்களையும், வேளாண் இயந்திரங்களையும் வழங்கி வருகின்றன. மேலும், மக்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்காக அரசு மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின்

(நபார்டு) பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றன.


1.2 தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, நீண்ட காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, நகரக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள் என நான்காக வகைப்படுத்தப்பட்டுள்ளன.




இந்திய ரிசர்வ் வங்கியானது தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் மூலம் கூட்டுறவு அமைப்புகளுக்கு வேளாண் மற்றும் வேளாண் சாரா கடன் வழங்கும் பொருட்டு சலுகையுடன் கூடிய நிதிப் பங்களிப்பினை வழங்கி வருகிறது. இதனால் கூட்டுறவுகள் நாட்டின் வங்கியியல் அமைப்புடன் ஒருங்கிணைக்கப்படுகிறது.

## 2. குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்பு

குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்பு என்பது கிராம அளவில் 4,451 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும், மாவட்ட அளவில் 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், மாநில அளவில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியையும் உள்ளடக்கிய அமைப்பாகும். இவை கிராமப்புறங்களில் வேளாண் மற்றும் வேளாண் சாரா கடன்களை அதிகளவில் வழங்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன.





## 2.1 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள்

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கமானது ஒரு வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் வசிக்கும் உறுப்பினர்களின் பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்யும் நிறுவன ரீதியான அமைப்பு ஆகும். அனைத்து தரப்பு மக்களும் எவ்வித பாகுபாடின்றி உறுப்பினராவதற்கு

இச்சங்கங்கள் வழிவகை செய்கின்றன. ஒரு குறிப்பிட்ட சங்கத்தின் செயற்பாட்டுப்பகுதியில் வசிக்கும் மக்கள் அச்சங்கத்தின் உறுப்பினராவதற்கு தகுதியுடையவர் ஆதலால் பலதரப்பட்ட மக்களை ஒரு பொதுவான கட்டமைப்பின் கீழ் கொண்டு வந்து, இச்சங்கங்கள் கிராம அளவில், பொருளாதார மேம்பாட்டில் முக்கிய பங்காற்றுகின்றன.

**தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பணிகள்**



மாநிலத்தில் 4,451 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. கிராமப்புறங்களில் வேளாண் மற்றும் வேளாண் சாரா கடன்களை வழங்குவதே இச்சங்கங்களின் முக்கிய நோக்கமாகும். பயிர்க்கடன்கள் மற்றும் பண்ணை இயந்திரங்கள் வாங்குதல், நுண் நீர்ப்பாசனம், கறவை மாடுகள் வாங்குதல் போன்ற வேளாண் சார்ந்த பணிகளுக்காக வழங்கப்படும் கடன்கள் வேளாண் கடன்களாகும். வீட்டுக்கடன், சுய உதவி குழுக்களின் வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு வழங்கப்படும் கடன்கள் மற்றும் இதர பண்ணை சாராக் கடன்கள் போன்றவை வேளாண்சாரா கடன்களாகும். இச்சங்கங்கள் விவசாய இடுபொருட்களான உரம், விதைகள் விற்பனையையும் மேற்கொண்டு வருகின்றன. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு

விசை உழவு இயந்திரம் (பவர் டில்லர்), டிராக்டர் போன்ற வேளாண் உழவு இயந்திரங்களை குறைந்த வாடகைக்கு அளித்து வேளாண் இயந்திரமயமாக்கலை ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாமல், தனிநபர் முதலீட்டு செலவினங்களையும் பெருமளவில் குறைக்கின்றன. இதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை பெருக்குவதற்கு வழிவகை செய்கின்றன.

இச்சங்கங்கள் பொது சேவை மையங்கள் மூலம், அரசு, குடிமக்களுக்கு வழங்கும் சேவைகளை வழங்கி வருகின்றன. குறிப்பாக, வருவாய்த்துறையின் சேவைகளான வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், ஆதரவற்ற விதவை சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ், நிலவுடமை ஆவணம் மற்றும் சமூக நலத்துறையின் சேவைகள் போன்றவற்றை

மக்களுக்கு வழங்கி வருகின்றன. இவை தவிர, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 23,503 முழு நேர நியாய விலைக்கடைகளையும் 9,565 பகுதி நேர நியாய விலைக்கடைகளையும், 49 நகரும் நியாய விலைக் கடைகளையும் நடத்தி வருகின்றன.

கடந்த ஐந்தாண்டுகளில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களின் செயல்பாடுகள் பின்வருமாறு.

தொகை (ரூ.கோடியில்)

| விவரம் | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 (தணிக்கை முடிக்கப்படாதது) |
|---|---|---|---|---|---|
| வைப்புத் தொகை | 7,352. 64 | 6,606.17 | 6,371. 79 | 6,657.61 | 7,131.35 |
| கடன் வழங்கியது | 15,403.51 | 17,784.88 | 19,723.89 | 22,746.86 | 28,276.17 |

## 2.2 மத்தியக் கூட்டுறவு வங்கிகள்

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அமைந்த தொடக்கக் கூட்டுறவு சங்கங்களின் கூட்டமைப்பாகும். மாநிலத்தில் 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள், வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், பணியாளர் கூட்டுறவு கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள், கூட்டுறவு நூற்பாலைகள் போன்ற அனைத்து இணைப்புச் சங்கங்களுக்கும் கடன் மற்றும் வங்கியியல் தொடர்பான சேவைகளை வழங்கி வருகின்றன.

இவ்வங்கிகள் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் வைப்புத் தொகை, நபார்டு மற்றும்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடமிருந்து பெறப்படும் கடன் மற்றும் மறுநிதி மூலம் நிதியாதாரங்களைப் பெறுகின்றன. இவ்வங்கிகள் மாநிலம் முழுவதும் 908 கிளைகளுடன் செயல்பட்டு பொதுமக்களுக்கு நேரடியாக வங்கியியல் சேவைகளை வழங்கி வருகின்றன.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் நடப்பாண்டு இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன. மேலும், 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் இந்திய ரிசர்வ் வங்கியிடம் வங்கியியல் உரிமம் பெற்றுள்ளன.

**மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகள் பின்வருமாறு:**

**தொகை (ரூ.கோடியில்)**

| விவரம் | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 (தணிக்கை முடிக்கப்படாதது) |
|---|---|---|---|---|---|
| உறுப்பினர்களின் பங்கு மூலதனம் | 1,252.23 | 1,308.93 | 1,434.38 | 1,489.00 | 1,661.71 |
| மாநில அரசின் பங்கு | 67.94 | 68.32 | 65.20 | 70.04 | 68.83 |
| ஒதுக்கீடு மற்றும் உபரி | 3,460.53 | 3,480.12 | 3,591.96 | 3,724.30 | 3,935.09 |
| வைப்புகள் | 28,343.91 | 27,693.41 | 28,792.35 | 30,316.00 | 31,927.28 |
| பெறப்பட்ட கடன்கள் | 4,340.41 | 4,885.59 | 6,324.87 | 8,478.87 | 6,729.60 |

**தேசிய மற்றும் வணிக வங்கிகளுக்கு இணையாக மத்திய கூட்டுறவு வங்கிகள் வழங்கி வரும் நவீன வங்கியியல் சேவைகள்:**

- மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை (CORE Banking Solution) நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது.
- பணப்பரிமாற்ற வசதிகள் – நிகழ்நேர மொத்த தீர்வு மற்றும் தேசிய மின்னணு நிதிப்பரிமாற்றம் (RTGS / NEFT).
- அலைபேசி வங்கியியல் சேவை (Mobile Banking service).
- குறுஞ்செய்தி வசதி (SMS Alert).
- 76 இடங்களில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (ATM)

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு ரூபே பற்று அட்டைகளை (Rupay Debit Cards) வழங்கி வருகின்றன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கடன் பெறும் விவசாயிகள், பயிர்க்கடன் தொகையை தானியங்கி பணம் வழங்கும்

இயந்திரம் மூலம் பெறுவதற்கு வசதியாக ரூபே வேளாண் கடன் அட்டைகள் (Rupay Kisan Credit Cards) வழங்கப்பட்டுள்ளது. மேலும், வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வசிப்பிடத்திலேயே வங்கியியல் சேவைகளை வழங்குவதற்கு மத்திய கூட்டுறவு வங்கிகளில் 'மைக்ரோ ஏடிஎம்' (Micro – ATMs) இயந்திரங்கள் நிறுவும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## 2.3 தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் இணையமாக செயல்படுவதோடு மட்டுமல்லாமல், மாநிலத்தில் உள்ள கூட்டுறவு வங்கியியல் அமைப்பின் காப்பாளராகவும் உள்ளது. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியானது, 1905ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வங்கியானது மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு கடனுதவி அளித்து வருகிறது.

இவ்வங்கி பொது மக்களிடமிருந்து பெறும் வைப்பு நிதி, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடம் பெறும் மறுநிதி உதவி மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் போன்ற உயர் நிதி நிறுவனங்களிடம் பெறும் கடன் ஆகியவற்றின் மூலம் நிதியாதாரங்களைத் திரட்டி வருகிறது. இவ்வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ள கூட்டுறவு வங்கிகளின் மிகை நிதியை கையாள்வதுடன் நிதி மேலாண்மை குறித்த வழிகாட்டுதலையும் அளிக்கிறது. மேலும், சென்னையில் 47 கிளைகள் மூலம் பொதுமக்களுக்கு நேரடி வங்கிச் சேவையும் வழங்கி வருகிறது.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் விவசாய கூட்டுறவு பணியாளர் பயிற்சி நிலையத்தின் மூலம் மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கப் பணியாளர்களின் பணித்திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. கடன் மதிப்பீடு, நிதி மேலாண்மை, வணிக வளர்ச்சி மற்றும் செயலற்ற சொத்து மேலாண்மை ஆகியவை குறித்து 2020-21 ஆம் ஆண்டில், 1993 பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி தொடர்ந்து நிதிநிலையில் வலுவான நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகளின் ஒப்பீடு விவரம் பின்வருமாறு:

தொகை (ரூ.கோடியில்)

| விவரம் | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 (தணிக்கை முடிக்கப்படாதது) |
|---|---|---|---|---|---|
| உறுப்பினர்களின் பங்கு மூலதனம் | 291.77 | 291.77 | 308.23 | 314.52 | 363.56 |
| மாநில அரசின் பங்கு | 20.26 | 20.26 | 20.26 | 20.26 | 20.26 |
| ஒதுக்கீடு மற்றும் உபரி | 778.66 | 598.01 | 608.11 | 622.70 | 800.71 |
| வைப்புகள் | 11,240.46 | 8,305.54 | 8,384.60 | 11081.93 | 10674.73 |
| பெறப்பட்ட கடன்கள் | 2,455.26 | 2,844.19 | 3,222.90 | 4199.40 | 9567.30 |
| நிகர லாபம் | 43.70 | 81.83 | 81.87 | 82.15 | 174.16 |

தேசிய மற்றும் வணிக வங்கிகளுக்கு இணையான சேவைகளை வழங்கும் பொருட்டு பெருமுயற்சி எடுத்து, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி பின்வருவற்றினை செயல்படுத்தியுள்ளது.

- மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை (CORE Banking Solution)

- பணப்பரிமாற்ற வசதிகள் – நிகழ்நேர மொத்த தீர்வு (RTGS), தேசிய மின்னணு நிதிப்பரிமாற்றம் (NEFT) மற்றும் உடனடி கட்டண சேவை வசதி (IMPS).
- இணைய வங்கியியல் (Internet Banking) சேவை
- அலைபேசி வங்கியியல் சேவை (Mobile Banking service).
- குறுஞ்செய்தி வசதி (SMS Alert).
- பெருநகர சென்னை மாநகராட்சியில் 13 இடங்களில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (ATM)

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு ரூபே பற்று அட்டைகளும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அட்டைகளை இந்தியாவிலுள்ள எந்த ஒரு தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்திலும்

பயன்படுத்தலாம். நவீன வங்கியியல் தொழில் நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழிகாட்டுவதில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி முக்கிய பங்காற்றி வருகிறது.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியினையும் (Primary Cooperative Development Fund), வைப்புத்தொகை உத்தரவாத நிதியினையும் (Deposit Guarantee Fund) பராமரித்து வருகிறது. மத்தியக் கூட்டுறவு வங்கிகள் நிதிப்பங்களிப்பிலிருந்து உருவாக்கப்பட்ட தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியானது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை வலுப்படுத்தவும், இச்சங்கங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் பயன்படுத்தப்படுகிறது.

31.07.2021 அன்றுள்ளபடி, தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியில் ரூ.45.58 கோடி இருப்பு உள்ளது.

வைப்புத் தொகை உத்தரவாத நிதிக்கு, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பங்களித்து வருகின்றன. இந்நிதியானது, பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புத் தொகையினைத் திரும்ப வழங்க இயலாத தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், பொதுமக்களுக்கு வைப்புத் தொகைகளை திரும்ப வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்நிதியானது கூட்டுறவு நிறுவனங்கள் மீதான மக்களின் நம்பகத் தன்மையையும், நன்மதிப்பினையும் தக்க வைக்க உதவிபுரிகிறது. 31.07.2021 தேதியில்

வைப்புத்தொகை உத்தரவாத நிதியில் ரூ.322.75 கோடி இருப்பு உள்ளது.

### 2.4 கூட்டுறவுக் கடன் சங்கங்களால் வழங்கப்படும் சேவைகள்

**(i) பயிர்க் கடன்**

கூட்டுறவுச் சங்கங்கள், உழவர் கடன் அட்டை (KCC) திட்டத்தின் கீழ் தேவைப்படும், வருவாய் துறை அளிக்கும் முக்கிய நில ஆவணங்களான பட்டா, சிட்டா மற்றும் பயிர் சாகுபடி மேற்கொள்வதற்கான சான்று (அடங்கல்) அடிப்படையிலும், மாநில தொழில்நுட்ப குழு நிர்ணயித்த கடன் அளவின் படியும் (Scale of Finance) விவசாயிகளுக்கு பயிர்க்கடன்களை வழங்கி வருகின்றன. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை எய்தும் வகையில், சிறு, குறு விவசாயிகள், பட்டியலின வகுப்பு / பட்டியலின பழங்குடியின விவசாயிகள் உட்பட

புதிய உறுப்பினர்களுக்கு பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவுச் சங்கங்கள் 7 சதவிகித வட்டி விகிதத்தில் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்குகின்றன. பயிர்க்கடனை உரிய கெடு தேதிக்குள் திரும்ப செலுத்தும் விவசாயிகளிடம் வட்டி வசூலிக்கப்படுவதில்லை. அதாவது வட்டியில்லா பயிர்க்கடன் இவ்விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இவ்வட்டி இழப்பினை ஈடுகட்டும் வகையில், பயிர்க்கடனை உரிய கெடு தேதிக்குள் திரும்ப செலுத்தும் விவசாயிகளுக்கு, தமிழ்நாடு அரசு 4 சதவிகித வட்டி ஊக்கத்தொகையும், இந்திய அரசு 3 சதவிகித வட்டி ஊக்கத்தொகையும் அளிக்கிறது. பயிர்க்கடன் வழங்குவதற்கு இந்திய அரசிடமிருந்து பெறும் வட்டி மானியம் அல்லாமல் தமிழ்நாடு அரசு,

கூட்டுறவு நிறுவனங்களுக்கு 2 சதவிகித வட்டி மானியத்தை வழங்கி வருகிறது.

2020-21 ஆம் ஆண்டில், 12,37,448 விவசாயிகளுக்கு ரூ.9,504.13 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில், 1,14,330 பட்டியலின வகுப்பு / பட்டியலின பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.755.81 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் பயிர்க்கடன் வழங்க ரூ.11,500/- கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2021-22 ஆம் ஆண்டில் 31.07.2021 வரை, 98,036 விவசாயிகளுக்கு ரூ.763.01 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில், 7,823 பட்டியலின வகுப்பு / பட்டியலின பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.53.30 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### (ii) கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கான கடன்கள்

அமைப்பு ரீதியிலான நிதி நிறுவனங்கள் மூலம் கடன் பெற இயலாதிருந்த சிறு மற்றும் குறு விவசாயிகள், வாரத்துக்கு பயிர்செய்வோர், குத்தகைக்குப் பயிரிடுவோர், வாய்மொழி குத்தகைதாரர்கள் ஆகியோர் அடங்கிய கூட்டுப்பொறுப்புக் குழுக்கள் துவக்கப்பட்டு, இக்குழு உறுப்பினர்களுக்கு கடன் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் சொந்த நிலமில்லாத, அதே சமயம் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளும் வட்டியில்லாப் பயிர்க்கடன்கள் பெறும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2020-21 ஆம் ஆண்டில், 12,776 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.444.44 கோடி பயிர்க் கடனும், 1,127 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.35.43 கோடி மத்தியக் கால முதலீட்டுக் கடனும் வழங்கப்பட்டுள்ளது.

**2021–22 ஆம் ஆண்டில் 31.07.2021 வரை, 283 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.12.09 கோடி பயிர்க் கடனும், 78 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.0.55 கோடி மத்தியக் கால** முதலீட்டுக் கடனும் வழங்கப்பட்டுள்ளது.

**(iii) வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த முதலீட்டுக் கடன்**

விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் நோக்கத்திலும், நிதி மூலதனத்தை உருவாக்குவதற்கும், நிலையான வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் உயர்வை உறுதி செய்யும் வகையில், கூட்டுறவு நிறுவனங்கள் நுண்ணீர்ப் பாசனம், நில மேம்பாடு, கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு மற்றும் பண்ணை இயந்திரமயமாக்குதல் போன்ற முதலீட்டு நோக்கங்களுக்கு கடன் வழங்க தொடர்ந்து ஊக்குவிக்கப்படுகின்றன.

2020–21ஆம் ஆண்டில், 55,283 விவசாயிகளுக்கு ரூ.420.79 கோடி முதலீட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

2021–22 ஆம் ஆண்டில் 31.07.2021 வரை, 2,085 விவசாயிகளுக்கு ரூ.16.94 கோடி முதலீட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**(iv) தானிய ஈட்டுக் கடன்**

விவசாயிகளின் விளைபொருட்களை கிடங்குகளில் இருப்பு வைத்து அதற்கு ஈடாக தானிய ஈட்டுக் கடன் வழங்குவதனால், அறுவடைக்காலங்களில் விளை பொருட்களின் விலை குறைவாக உள்ள போது விவசாயிகள் தமது தானியங்களை சேமித்து வைத்து இலாபகரமான விலை கிடைக்கின்ற போது விற்றுப் பயனடைய வாய்ப்பளிக்கிறது.

2020–21 ஆம் ஆண்டில், 10,749 நபர்களுக்கு ரூ.336.30 கோடி தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

2021–22 ஆம் ஆண்டில் 31.07.2021 வரை, 2,233 பயனாளிகளுக்கு ரூ.63.29 கோடி தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**(v) சுய உதவிக் குழுக்களுக்கு நிதி உதவி**

கூட்டுறவு கடன் நிறுவனங்கள் சுய உதவிக் குழுக்களுக்கு தொடர்ந்து கடன் வழங்கி அவர்களின் கடன் தேவைகளை நிறைவு செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

நிறுவனம் சார்ந்த கடனுதவிகள் அனைவருக்கும் கிடைப்பதை (Financial inclusion) ஊக்குவிக்கும் பொருட்டு, 2020–21 ஆம் ஆண்டில், 54,434 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.1,699.81 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

2021-22 ஆம் ஆண்டில் 31.07.2021 வரை, 2,004 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.78.54 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**(vi) மாற்றுத் திறனாளிகளுக்கான கடன்**

கூட்டுறவு நிறுவனங்கள், மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி அவர்களின் பொருளாதாரம் மற்றும் வருமானத்தை பெருக்கும் வகையிலான தொழில் நடவடிக்கைகளுக்கு கடன்கள் வழங்கி வருகின்றன. உரிய காலத்தில் கடனை திருப்பி செலுத்தும் கடன்தாரரிடமிருந்து வட்டி வசூலிக்கப்படுவதில்லை.

2020-21 ஆம் ஆண்டில், 6,461 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.33.68 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

2021–22 ஆம் ஆண்டில் 31.07.2021 வரை, 696 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.3.97 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**(vii) சிறு வணிகர்களுக்கான சிறுவணிகக் கடன்**

சிறுவணிகர்கள், தனியாரிடம் அதிக வட்டியில் கடன் பெறுவதை தவிர்க்கவும், அவர்களை முறையான வங்கி முறையின் கீழ் கொண்டு வரும் வகையில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள், பூ, காய்கறிகள் மற்றும் பழங்கள் வியாபாரம் செய்தல், பெட்டிக் கடை நடத்துதல் போன்ற சிறு வணிகங்கள் செய்பவர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கி வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், குழு அமைத்து கடன்கள் வழங்குவது ஊக்குவிக்கப்படுகிறது. இதன்படி கடன் பெறும் சிறுவணிகர்கள் ஒருவருக்கொருவர் பிணையதாரராகவும், பெற்ற கடனை திருப்பிச்

செலுத்தும் பொறுப்பினையும் ஏற்றுக் கொள்கின்றனர்.

2020-21 ஆம் ஆண்டில், 95,303 நபர்களுக்கு ரூ.289.43 கோடி சிறுவணிகக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

2021-22 ஆம் ஆண்டில் 31.07.2021 வரை, 16,640 நபர்களுக்கு ரூ.57.51 கோடி சிறுவணிகக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**(viii) மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டம்**

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள், மகளிர் தொழில் முனைவோருக்கு சிறு தொழில் தொடங்க ரூ.10 இலட்சம் வரை கடன் வழங்கி வருகின்றன.

மகளிரின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில் 2020-21 ஆம் ஆண்டில், 10,689 மகளிர் தொழில் முனைவோர்களுக்கு ரூ.50.01 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

2021–22 ஆம் ஆண்டில் 31.07.2021 வரை, 1,799 மகளிர் தொழில் முனைவோர்களுக்கு ரூ.9.48 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**(ix) பணிபுரியும் மகளிர் கடன் திட்டம்**

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் மாத சம்பளம் பெறும் பணிபுரியும் மகளிருக்கு இத்திட்டத்தின் கீழ் நுகர்வோர் கடன் உதவி வழங்கி வருகின்றன.

2020–21 ஆம் ஆண்டில், 3,089 பணிபுரியும் மகளிருக்கு ரூ.70.24 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

2021–22 ஆம் ஆண்டில் 31.07.2021 வரை, 508 பணிபுரியும் மகளிருக்கு ரூ.11.64 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**(x) பயிர்க் காப்பீடு**

விவசாயிகள் சாகுபடி செய்த பயிர்களுக்கு எதிர்பாராத நிகழ்வுகளால் சேதம் ஏற்படும் போது

இழப்பீட்டுத் தொகை வழங்கி, விவசாயிகளின் நிலையான வருமானத்திற்கு வழிவகை செய்யும் வகையில் மாநிலத்தில் பிரதம மந்திரி பயிர்க்காப்பீட்டுத் திட்டம் (PMFBY) 2016 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2020–21 ஆம் ஆண்டில் 3,87,808 விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக சேர்க்கப்பட்டு, ரூ.47.32 கோடி காப்பீட்டுத் தொகை வசூலிக்கப்பட்டு தொடர்புடைய காப்பீட்டு நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது. 2016–17 ஆம் ஆண்டு முதல் 31.07.2021 வரை பயிர்க்காப்பீடு செய்த 25,95,893 விவசாயிகளுக்கு ரூ.5,696.43 கோடி மகசூல் இழப்புக்கான இழப்பீட்டுத் தொகை கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.**

**(xi) பொதுச் சேவை மையங்கள்**

அரசின் இணையவழிச் சேவைகளை பொதுமக்களுக்கு உடன் வழங்குவதில் உள்ள இடர்பாடுகளை களைவதே பொதுச்சேவை மையங்களின் நோக்கமாகும். அரசுத்துறைகளின் அனைத்துவகைச் சேவைகளையும் ஒருங்கிணைந்த விதத்தில், ஒரே இடத்தில், நியாயமான கட்டணத்தில், சாமானிய மக்களுக்கு வழங்குவதற்காக பொதுச் சேவை மையங்கள் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலுள்ள கூட்டுறவு நிறுவனங்களிலும், அதிலும் குறிப்பாக புறநகர் மற்றும் தொலை தூரங்களில் உள்ள கிராமப்புறங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் தற்போது, **4,412** பொதுச் சேவை மையங்கள் கூட்டுறவுகளால் நடத்தப்பட்டு வருகிறது. இச்சேவை மையங்கள் இ-சேவை மற்றும் டிஜிட்டல் சேவா (Digital Seva Portal) போன்ற

தளங்களின் மூலம் பலதரப்பட்ட சேவைகளை மக்களுக்கு வழங்கி வருகின்றன. இம்மையங்களின் மூலம் வருவாய்த்துறையின் சேவைகளான வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், ஆதரவற்ற விதவை சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ், நிலவுடமை ஆவணம் மற்றும் சமூக நலத்துறையின் சேவைகள், மேலும் பதிவுத்துறையின் சேவைகளான வில்லங்க சான்றிதழ் மற்றும் சான்றளிக்கப்பட்ட நகல் முதலான சேவைகளும் வழங்கப்படுகின்றன.

2020-21 ஆம் ஆண்டில் பொது சேவை மையங்களில் 48,01,780 சேவைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு, இதன் மூலம் கூட்டுறவு சங்கங்களில் ரூ.16.29 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

**2021–22 ஆம் ஆண்டில் 31.07.2021 வரை, பொது சேவை மையங்களில் 12,17,359 சேவைகள்** பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு, இதன் மூலம் கூட்டுறவு சங்கங்களில் ரூ.3.69 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

**3. நீண்டகால கூட்டுறவுக் கடன் அமைப்பு**

நீண்டகாலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியும், வட்ட / வட்டார அளவில் 180 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும் உள்ளடக்கியதாகும்.

**3.1 தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி**

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியானது, தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி

வங்கிகளுக்கு நீண்ட காலக் கடன்களை வழங்கி வருகிறது. நபார்டு வங்கியிலிருந்து மறுநிதியுதவி பெற அரசு உத்தரவாதம் ஏதும் இல்லாத காரணத்தினால் 2004–லிருந்து நீண்டகாலக் கடன் வழங்க இயலவில்லை. தற்போது, நபார்டு வங்கியிடமிருந்து மறுநிதியுதவி பெற்று நீண்டகாலக் கடன்களை மறுபடியும் வழங்குவதற்கு பிப்ரவரி 2021 இல் ரூ.100 கோடிக்கு அரசு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

வங்கியின் பங்கு மூலதனம் **31.03.2021** அன்றுள்ளபடி ரூ.**51.31** கோடியாகவும், வைப்புகள் ரூ.**290.18** கோடியாகவும் உள்ளது. **2020–21** ஆம் ஆண்டில் இவ்வங்கி ரூ.**1,111.69** கோடி நகைக்கடன் வழங்கியுள்ளது.

**2021–22** ஆம் ஆண்டில் **31.07.2021** வரை, இவ்வங்கி ரூ.**78.69** கோடி நகைக்கடன் வழங்கியுள்ளது.

**3.2. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்**

மாநிலத்தில் 180 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள், தங்களிடம் உள்ள சொந்த நிதியிலிருந்து நகைக்கடன்களை வழங்கி வருகின்றன.

இவ்வங்கிகளால் 2020-21 ஆம் ஆண்டில் ரூ.1,425.65 கோடி நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது. 154 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் பொதுச்சேவை மையங்கள் துவக்கப்பட்டு, பொது மக்களுக்கு பல்வேறு இ-சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வங்கிகளால் 2021-22 ஆம் ஆண்டில் 31.07.2021 வரை, ரூ.43.40 கோடி நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

## 4. நகரக் கூட்டுறவுக் கடன் அமைப்பு

மாநிலத்தில் நகர கூட்டுறவு கடன் அமைப்பு, மாநில அளவில் தமிழ்நாடு நகர கூட்டுறவு வங்கிகளின் இணையத்தையும், நகர மற்றும் புறநகர் பகுதிகளில் செயல்படும் 128 கூட்டுறவு நகர வங்கிகள் மற்றும் 116 நகர கூட்டுறவு கடன் சங்கங்களையும் உள்ளடக்கியதாகும்.

### 4.1. தமிழ்நாடு நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையம்

மாநிலத்தில் நகர கூட்டுறவுக் கடன் இயக்கத்தின் வளர்ச்சியினை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகவும், நகர்ப்புற மக்களின் கடன் தேவைகளை நிறைவு செய்யும் பணியில் நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழிகாட்டியாகவும், தமிழ்நாடு நகர கூட்டுறவு வங்கிகளின் இணையம் செயல்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு நகர கூட்டுறவு வங்கிகளின் இணையம் நகரக்

கூட்டுறவு வங்கிகளுக்கு நிர்வாகம், பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் வங்கிகள் நவீன வங்கியியல் தொழில் நுட்பங்களை நடை முறைப்படுத்துதல் போன்றவற்றில் உதவி புரிந்து வருகிறது.

### 4.2. நகரக் கூட்டுறவு வங்கிகள்

நகரக் கூட்டுறவு வங்கிகள், நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வங்கிச் சேவைகள் மற்றும் கடன் வசதிகளை அளித்து வருகின்றன. மாநிலத்தில் தற்போது 128 நகரக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டுவருகின்றன. இவ்வங்கிகள், பொது மக்களிடமிருந்து வைப்புகளை பெறுகிறது. வீடு கட்டுதல், வணிகம் மற்றும் உறுப்பினர்களின் அவசர மற்றும் சொந்த தேவைகளுக்காக நகைக் கடன் உள்ளிட்ட இதர பண்ணைசாராக் காரியங்களுக்காக கடன் வசதிகளை அளித்து வருகின்றன.

வாடிக்கையாளர்களுக்கு நவீன வங்கியியல் சேவையினை அளிப்பதற்காக நகரக் கூட்டுறவு வங்கிகளில் மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நகரக் கூட்டுறவு வங்கிகளில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்களை (ATM) நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

31.07.2021 அன்றுள்ளபடி நகரக் கூட்டுறவு வங்கிகளின் வைப்புத் தொகை ரூ.7,373.56 கோடியாக உள்ளது. இவ்வங்கிகளால் 2020-21 ஆம் ஆண்டில், 7,81,547 உறுப்பினர்களுக்கு ரூ.6,179.31 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வங்கிகள், நகர்ப்புறத்திலுள்ள 15,780 சிறு வணிகர்களுக்கு ரூ.38.37 கோடி கடன் வழங்கியுள்ளது. இதன் மூலம், அதிக வட்டியில் கடன் வழங்கும் தனியாரிடமிருந்து பல சிறுவணிகர்கள் கடன் பெறுவது தடுக்கப்படுகிறது.

இவ்வங்கிகளால் 2021–22 ஆம் ஆண்டில் 31.07.2021 வரை, 1,48,702 உறுப்பினர்களுக்கு ரூ.1,156.80 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வங்கிகள், நகர்ப்புறத்திலுள்ள 2,396 சிறு வணிகர்களுக்கு ரூ.5.92 கோடி கடன் வழங்கியுள்ளது.

**4.3. நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்**

தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 116 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு கடன் வழங்கும் பணியினை செய்து வருகின்றன. இச்சங்கங்கள், பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, சிறு வணிகர்கள், கைவினைக் கலைஞர்கள் மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கு, வீட்டுவசதிக் கடன், வணிகக் கடன் மற்றும் இதர பண்ணைசாராக் கடன்களை வழங்கி வருகின்றன.

31.07.2021 அன்றுள்ளபடி நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வைப்புத் தொகை ரூ.1,506.48 கோடியாக உள்ளது. இச்சங்கங்களால், 2020-21 ஆம் ஆண்டில் 2,51,538 உறுப்பினர்களுக்கு ரூ.1,640.72 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகரக் கூட்டுறவுச் சங்கங்களால் நகர்புறத்திலுள்ள சிறு வணிகர்களுக்கு ரூ.6.45 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

இச்சங்கங்களால், 2021-22 ஆம் ஆண்டில் 31.07.2021 வரை, 30,913 உறுப்பினர்களுக்கு ரூ.225.62 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**5. பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள்**

தமிழ்நாட்டில் 1,716 பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள் மாநில மற்றும் மத்திய அரசுப் பணியாளர்கள், அரசு சார்ந்த

மற்றும் தனியார் நிறுவனங்களின் பணியாளர்கள் பயன் பெறும் வகையில் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் முதன்மை நோக்கங்கள் பணியாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை உருவாக்குவதும் நியாயமான வட்டி விகிதத்தில் அவர்களுக்கு கடன்கள் வழங்குவதும் ஆகும். இச்சங்கங்கள் 31.07.2021 அன்றுள்ளபடி ரூ.3,741.59 கோடி பங்கு மூலதனத்துடனும் ரூ.18,551.32 கோடி நடைமுறை மூலதனத்துடனும் செயல்பட்டு வருகின்றன.

2020-21 ஆம் ஆண்டில், ரூ.6,216.95 கோடி அளவிற்கு இச்சங்கங்களால் 2,21,498 உறுப்பினர்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 2021-22 ஆம் ஆண்டில் 31.07.2021 வரை, ரூ.1,944.89 கோடி அளவிற்கு இச்சங்கங்களால் 46,161 உறுப்பினர்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

# இயல் – II

# கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

## 1. முன்னுரை

தமிழ்நாட்டில், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இரண்டடுக்கு அமைப்பாக செயல்படுகிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மாநில அளவிலும் மற்றும் 112 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வட்ட/வட்டார அளவிலும் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் செயல்படும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு தலைமைச்

சங்கமாகச் செயல்பட்டு வருகிறது. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மேற்குறிப்பிட்டுள்ள மாவட்டங்களிலுள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு மண்டல இணையமாக செயல்பட்டு வருகிறது.

மாநிலத்திலுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், உறுப்பினர்கள் விளைவிக்கும் வேளாண் விளைப்பொருட்களை நியாயமான விலைக்கு சந்தைப்படுத்திட ஏற்பாடு செய்தல், விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்களை விநியோகித்தல், விளைப்பொருட்களின் மீது தானிய ஈட்டுக் கடன் வழங்குதல், வேளாண் விளைப்பொருட்களைப் பதப்படுத்தி மதிப்புக் கூட்டும் பணியினை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

## 2. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED)

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், 1959ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 18 மண்டல அலுவலகங்களுடன் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக உரம் மற்றும் இதர இடுபொருட்கள் விநியோகம் மேற்கொண்டு வருகிறது. இணையத்திற்கு சொந்தமான திருவாரூர் மாவட்டம் மன்னார்குடிக்கு அருகில் உள்ள பாமணி என்ற இடத்தில் 1970 ஆம் ஆண்டு இணையத்திற்குச் சொந்தமாக தினசரி 150 டன். உற்பத்தி திறன் கொண்ட உரக்கலவை ஆலை துவக்கப்பட்டது. இதில் தயாரிக்கப்படும் கலவை

உரம் 'பாமணி' என்ற பெயரிலேயே விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், இவ்விணையத்திற்கு சொந்தமாக மதுரை, வேலூர், திருச்சி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் உரக்கலவை ஆலை இயங்கி வருகிறது. இவ்விணையத்திற்கு 36,140 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 45 சொந்தக் கிடங்குகளும், சென்னையில் 3460 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரண்டு குளிர்பதனக் கிடங்குகளும் உள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், அரசின் விவசாய விளைப்பொருட்களுக்கான ஆதரவு விலை திட்டத்தின் தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் முகவராக தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகிறது. இவ்விணையம் இந்திய எண்ணெய்க்

கழகத்துடன் இணைந்து 8 பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை அலகுகளை நடத்தி வருகிறது.

2021-22-ஆம் ஆண்டில் உர வணிகத்தில் கூட்டுறவு சங்கங்களின் பங்கினை உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், விதை விற்பனை, உயிர் உர விற்பனை ஆகியவற்றினை கணிசமாக உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 2020-21 ஆம் ஆண்டில் இணையத்தின் மொத்த புரள் வணிகம் ரூ. 809.23 கோடி ஆகும். 2021-22 ஆம் ஆண்டில் இணையம் ரூ. 1579.62 கோடிக்கு புரள்வணிகம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. 31.07.2021-இன் படி இணையத்தின் புரள் வணிகம் ரூ. 216.90 கோடி ஆகும்.

## 3. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் (TCMF)

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பணை இணையம் 1941–இல் ஆரம்பிக்கப்பட்டு தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள 12 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மண்டல இணையமாக செயல்பட்டு வருகிறது. உர விற்பனையை முதன்மையாகச் செய்து வரும் இவ்விணையம் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை விநியோகிப்பதுடன், உறுப்பினர்களுக்கு நகைக் கடனும் வழங்கி வருகிறது. இணையத்திற்குச் சொந்தமாக 6,600 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 11 கிடங்குகள் உள்ளன. 2020–21 ஆம் ஆண்டில் இணையத்தின் மொத்த புரள் வணிகம் ரூ. 93.23 கோடி ஆகும். 2021–22 ஆம் ஆண்டில் இணையம் ரூ. 134.20 கோடிக்கு புரள்வணிகம் மேற்கொள்ள

திட்டமிடப்பட்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் (31.07.2021 வரை) இணையத்தின் புரள் வணிகம் ரூ. 7.17 கோடி ஆகும்.

### 4. நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம்

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் 1935 இல் ஆரம்பிக்கப்பட்டு, நீலகிரி மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியை செயல் எல்லையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இச்சங்கம், விவசாயிகள் மற்றும் பெரும்பாலான மலைவாழ் பழங்குடியினரின் விளைப்பொருள்களை ஆதாய விலைக்கு விற்பனை செய்வதோடு, வேளாண் இடுபொருட்களை வழங்குதலையும் தனது முதன்மை நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் மேட்டுப்பாளையத்தில் உருளைக் கிழங்கு ஏல விற்பனைக் களம் ஒன்றையும், நீலகிரியில் விளையும் பயிர்களின் தேவைகளுக்கேற்ப உரக்கலவை தயாரிக்கும் நிலையம் ஒன்றையும் நடத்தி வருகிறது. 2020–21 ஆம் ஆண்டில் சங்கத்தின் மொத்த புரள் வணிகம் ரூ. 98.62 கோடி ஆகும். 2021–22 ஆம் ஆண்டில் (31.07.2021 வரை) சங்கத்தின் புரள் வணிகம் ரூ. 17.13 கோடி ஆகும்.

### 5. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் (APCMS)

மாநிலம் முழுவதும் 112 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வேளாண் விளைப்பொருள் விற்பனை, உரம் மற்றும் இதர வேளாண் இடுபொருட்கள் விற்பனை ஆகியவற்றை முதன்மை நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு

வருகின்றன. இச்சங்கங்கள், விவசாய உறுப்பினர்கள் தங்களின் வேளாண் விளைப்பொருட்களை இலாபகரமான விலைக்கு விற்பதற்கு ஏதுவாக ஏல விற்பனைக் களங்கள், உலர் களங்கள் மற்றும் கிடங்குகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை அளித்து வருகின்றன. பெரும்பாலான கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் முதன்மைச் சங்கங்களாகச் செயல்பட்டு அத்தியாவசியப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு நகர்வு செய்கின்றன. மேலும், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாயவிலைக் கடைகளையும் நடத்தி வருகின்றன. 2020-21 ஆம் ஆண்டில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ 2129.59 கோடிக்கு புரள் வணிகம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

2021–22 ஆம் ஆண்டில் (31.07.2021 வரை) வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் புரள் வணிகம் ரூ.641.12 கோடி ஆகும்.

## 5.1 வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயல்பாடுகள்

### (i) வேளாண் விளைப்பொருள் விற்பனை

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், வணிகர்கள் மற்றும் விவசாய உறுப்பினர்களின் வணிகத்திற்காக ஏல விற்பனைக் களங்கள், உலர்களங்கள், தானிய ஈட்டுக்கடன் ஆகிய வசதிகளை அளித்து வேளாண் உறுப்பினர்கள் தங்களது விளைப்பொருட்களை வெளிப்படையான முறையில் ஆதாய விலைக்கு விற்பனை செய்ய வழிவகை செய்கின்றன. மேலும், வேளாண் விளைப்பொருட்களை கொள்முதல் செய்தல்

ஆகிய பணிகளுடன், வேளாண் விளைப்பொருட்களின் மதிப்புக் கூட்டுதல் போன்ற பணிகளையும் செய்து வருகின்றன. 2020-21 ஆம் ஆண்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ. 773.31 கோடி அளவிற்கு வேளாண் விளைப் பொருட்களை விற்பனை செய்துள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.1356.25 கோடி அளவிற்கு வேளாண் விளைப் பொருட்களை விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் (31.07.2021 வரை) கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.248.03 கோடி அளவிற்கு வேளாண் விளைப் பொருட்களை விற்பனை செய்துள்ளது.

**(ii) விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்**

தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கடன்தாரர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உறுப்பினர்களாக

சேர்க்கப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் உறுப்பினர் கடன்தாரர்களின் வேளாண் விளைப்பொருட்களை விற்பனை செய்ய உதவி புரிந்து வருகின்றன. இதன் மூலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கடன் தொகை வசூலாவதோடு, வேளாண் உறுப்பினர்களின் விளைப்பொருட்களை ஆதாய விலைக்கு விற்பனை செய்ய உதவி வருகின்றன. 2020-21 ஆம் ஆண்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.4.03 கோடி அளவிற்கு கடன் வசூலித்துள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் (31.07.2021 வரை) கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.0.85 கோடி அளவிற்கு கடன் வசூலித்துள்ளது.

### (iii) விற்பனையுடன் இணைந்த நுகர்வோர் கூட்டுறவு

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுடன் இணைந்து செயல்படுகின்றன. இதனால் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாய உறுப்பினர்களின் விளை பொருட்களைக் கொள்முதல் செய்து, பதப்படுத்தி கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு விற்பனைச் செய்வதன் மூலம் பண்டகசாலைகளுக்குத் தரமான பொருட்கள் நியாயமான விலையில் கிடைப்பதுடன் விவசாயிகள் மற்றும் நுகர்வோர்களுக்கு நியாயமான ஆதாய விலையும் கிடைக்கிறது. 2020-21 ஆம் ஆண்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் நுகர்வோர் கூட்டுறவுடன் இணைந்து ரூ.90.08 கோடி மதிப்பிலான மதிப்புக்கூட்டப்பட்ட வேளாண்

விளைபொருட்களை விற்பனை செய்துள்ளன. 2021-22 ஆம் ஆண்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.126.70 கோடி அளவிற்கு நுகர்வோர் கூட்டுறவுடன் இணைந்து மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மூலம் மதிப்புக்கூட்டப்பட்ட வேளாண் விளைபொருட்களை விற்பனைச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் (31.07.2021 வரை) கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் நுகர்வோர் கூட்டுறவுடன் இணைந்து ரூ.23.57 கோடி மதிப்பிலான மதிப்புக்கூட்டப்பட்ட வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்துள்ளன.

**(iv) தானிய ஈட்டுக் கடன் வழங்குதல்**

அறுவடைக் காலங்களில் விவசாயிகள் தங்களது அவசரத் தேவைகளுக்காக வேளாண் விளைப் பொருட்களை மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதை தவிர்க்கவும், வேளாண்

விளைப் பொருட்களை சேமித்து வைத்து சாதகமான சந்தை சூழ்நிலையின் போது ஆதாய விலைக்கு விற்பனை செய்ய ஏதுவாக கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாயிகளுக்கு தானிய ஈட்டுக் கடன் வழங்கி வருகின்றன. 2020-21 ஆம் ஆண்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ. 98.84 கோடி அளவிற்கு தானிய ஈட்டுக் கடன் வழங்கியுள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.254.44 கோடி அளவிற்கு தானிய ஈட்டுக் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் (31.07.2021 வரை) கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ. 25.90 கோடி அளவிற்கு தானிய ஈட்டுக் கடன் வழங்கியுள்ளது.

**(v) தரமான விதைகள் விற்பனை**

விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைக்கச் செய்யும் வகையில் கூட்டுறவு

விற்பனைச் சங்கங்கள் நெல், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், சிறுதானியங்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றின் தரமான விதைகளைக் கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கு விற்பனைச் செய்து வருகின்றன. 2020-21 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ. 5.02 கோடி அளவிற்கு தரமான விதைகள் விற்பனை செய்துள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.32.71 கோடி அளவிற்கு தரமான விதைகள் விற்பனைச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் (31.07.2021 வரை) கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ. 1.28 கோடி அளவிற்கு தரமான விதைகள் விற்பனை செய்துள்ளது.

**(vi) உர விநியோகம்**

வேளாண் உற்பத்தியை அதிகரித்திட, பயிர்க்கடனில் ஒரு பகுதியாக உரங்கள்

விவசாயிகளுக்கு வழங்கப்படுவதுடன், ரொக்கத்திற்கும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக விற்பனைச் செய்யப்படுகிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவை கூட்டுறவுச் சங்கங்களுக்கான மொத்த உர விற்பனை முகவர்களாக செயல்பட்டு வருகின்றன. 2020-21 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 4,86,830 மெட்ரிக் டன் அளவில் ரூ. 709.20 கோடி மதிப்பிற்கு உர விநியோகம் செய்துள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 8,80,000 மெட்ரிக் டன் அளவிற்கு உர விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் (31.07.2021 வரை) கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 1,32,821 மெட்ரிக் டன் அளவில்

ரூ. 232.75 கோடி மதிப்பிற்கு உர விநியோகம் செய்துள்ளது.

**(vii) பதனிடுதல் மற்றும் வேளாண் விளைப் பொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல்**

வேளாண் விளைப் பொருட்களைப் பதப்படுத்தி அவைகளின் மதிப்பைக் கூட்ட, சில கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், பருத்தி ஆலை, பருப்பு பதனிடும் அலகு, மிளகாய் அரவை ஆலை, எண்ணெய் பிழியும் ஆலை மற்றும் அரிசி ஆலை ஆகியவற்றை நடத்தி வருகின்றன. இப்பதனிடும் அலகுகள் விவசாய பொருட்களை மதிப்புக் கூட்டி விவசாயிகளுக்கு ஆதாய விலையை தரும் பணியை செய்கின்றன. அரிசி, பருப்பு, மஞ்சள் தூள், மசாலா பொருட்கள் மற்றும் எண்ணெய் வகைகள் உள்ளூரில் தயாரிக்கப்பட்டு சில

கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் சந்தைப்படுத்தப்பட்டு வருகிறது.

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் "அர்த்தநாரீஸ்வரா" என்ற வணிக பெயரிலும், ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் "மங்களம்" என்ற வர்த்தக பெயரிலும், சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் "அமிர்தம்" என்ற வர்த்தக பெயரிலும், பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் "பசுமை" என்ற வர்த்தக பெயரிலும் விற்பனை செய்து வருகின்றன. இவற்றில் சில பொருட்கள் நாடு முழுவதும் விற்பனை செய்யப்படுகிறது. 2020-21 ஆம் ஆண்டில் இப்பொருள்களின் புரள் வணிகம் ரூ.17.09 கோடி ஆகும். 2021-22 ஆம் ஆண்டில் (31.07.2021 வரை)

இப்பொருள்களின் புரள் வணிகம் ரூ.2.91 கோடி ஆகும்.

**(viii) ஊரக பகுதிகளில் கிடங்கு பயன்பாட்டினை அதிகரித்தல்**

அறுவடைக் காலங்களில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களை குறைந்த விலைக்கு விற்பனை செய்வதை தவிர்த்திடவும் சேமிப்பு இழப்புகளின்றி பாதுகாத்திடவும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் 5,10,600 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 3879 கிடங்குகள் பயன்பாட்டில் உள்ளது. மேலும், 165 கிடங்குகள் கட்ட உத்தேசிக்கப்பட்டு அவற்றின் கட்டுமான பணி நிறைவுறும் தருவாயில் உள்ளது.

2020-2021ஆம் ஆண்டில் இச்சேமிப்பு கிடங்குகளில் தானியங்களை ஈடாக வைத்து 7575

விவசாயிகள் ரூ.239.39 கோடி தானிய ஈட்டுக் கடன் பெற்று பலன் அடைந்துள்ளனர். மேலும், 6512 விவசாயிகள் ரூ.216.31 கோடி மதிப்புள்ள விவசாய விளை பொருட்களை வாடகைக்கு வைத்து பயனடைந்துள்ளனர். இதனை தவிர தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும், கொள்முதல் செய்யும் நெல்லை சேமிக்க இக்கிடங்குகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2021–22 ஆம் ஆண்டில் (31.07.2021 வரை) 2215 விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை ஈடாக வைத்து ரூ.55.51 கோடி தானிய ஈட்டுக் கடன் பெற்று பலன் அடைந்துள்ளனர். மேலும், 2241 விவசாயிகள் ரூ.45.84 கோடி மதிப்புள்ள விவசாய விளைபொருட்களை வாடகைக்கு வைத்து பயனடைந்துள்ளனர்.

மேற்கண்ட கிடங்குகளை முழுமையாக பயன்படுத்திட, விவசாயிகளை ஊக்குவித்து

தானிய ஈட்டுக் கடன் பெறவும், விவசாய விளைபொருட்களை வாடகைக்கு வைத்து பயன் பெறவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ix) நேரடி கொள்முதல் நிலையங்கள் நடத்துதல்**

கூட்டுறவுச் சங்கங்கள், பாசன பகுதி அல்லாத மாவட்டங்களில் மிக குறைந்த அளவிலேயே நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை நடத்தி வருகின்றன. காரீப் பருவம் 2021 இல், பெரும்பாலான விவசாயிகளின் விருப்பத்திற்கேற்ப பாசன பகுதி அல்லாத மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் அதிக அளவில் நேரடி கொள்முதல் நிலையங்கள் நடத்தப்பட உள்ளன. விவசாயிகளிடமிருந்து குறைந்தபட்ச ஆதார விலையில் கொள்முதல் செய்வதை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல், கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளூர் விவசாயிகளுடன்

**நெருங்கிய உறவை வளர்த்திட இது உதவி செய்கிறது.**

# இயல் – III

## நுகர்வோர் கூட்டுறவுகள்

1. நுகர்வோர் கூட்டுறவுகள், தரமான பொருட்களை நியாயமான விலையில் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு சேவை நோக்குடன் வழங்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. நுகர்வோர் கூட்டுறவுகள் இடைத்தரகர்களின்றி சந்தைக் குறுக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் விலை உயர்வினைக் கட்டுப்படுத்துவதில் பெரும்பங்காற்றி வருகின்றன.

தமிழ்நாட்டில், நுகர்வோர் கூட்டுறவு அமைப்பானது மூன்றடுக்கு அமைப்பாக செயல்படுகிறது. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், மாநில அளவிலும், 39 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்

மாவட்ட அளவிலும், 369 தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் தொடக்க நிலையிலும் செயல்பட்டு வருகின்றன.

## 2. செயல்பாடுகள்

### 2.1 தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் (TNCCF)

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மாநிலத்தில் உள்ள அனைத்து நுகர்வோர் கூட்டுறவுகளின் தலைமை நிறுவனமாகும். இணைப்புச் சங்கங்களை ஒருங்கிணைத்து, அவற்றின் செயல்பாட்டிற்குத் துணைபுரியும் விதமாக அதிகமாக விற்பனையாகக்கூடிய நுகர்பொருட்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து, இணைப்புச் சங்கங்களுக்கு விநியோகம் செய்வது தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் முக்கிய நோக்கமாகும். எழுதுபொருட்கள் மற்றும் அச்சக

மூலப்பொருட்களை தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மொத்தமாகக் கொள்முதல் செய்து அவற்றை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் மற்றும் கூட்டுறவு அச்சகங்களுக்கு விநியோகம் செய்து வருகிறது. கூட்டுறவு நிறுவனங்களுக்கான பட்டாசு கொள்முதல் பணியினையும் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் ஒருங்கிணைத்து செயல்படுகிறது. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் இரண்டு பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்களையும் நடத்திவருகிறது. 2020-21 ஆம் ஆண்டில் 31.03.2021 வரை தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் ரூ.4437.43 இலட்சம் அளவிற்கு மொத்த விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2021-22-ஆம் ஆண்டில் 31.07.2021 வரை தமிழ்நாடு

நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் **ரூ.479.86 இலட்சம்** அளவிற்கு மொத்த விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2.2 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்

நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மாவட்ட அளவில் செயல்படுகின்றன. தமிழ்நாட்டில் தற்போது 39 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் தரமான பொருள்களை நியாயமான விலையில் நுகர்வோருக்கும், பொதுமக்களுக்கும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன.

மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், 17 பல்பொருள் அங்காடிகள், 48 சிறு பல்பொருள் அங்காடிகள், 61 சில்லறை விற்பனை நிலையங்கள், 55

சுயசேவைப் பிரிவுகள், 114 கூட்டுறவு மருந்தகங்கள், 37 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், 27 பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள், 31 சமையல் எரிவாயு வழங்கும் அலகுகள் மற்றும் 82 மண்ணெண்ணெய் வழங்கும் மையங்கள் ஆகியவற்றை தமிழ்நாடு முழுவதும் நடத்தி வருகின்றன.

மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் முதன்மைச் சங்கங்களாக செயல்பட்டு, அத்தியாவசியப் பொருட்களை நியாய விலைக்கடைகளுக்கு விநியோகம் செய்து, பொது விநியோகத் திட்டத்தினைச் சிறப்பான முறையில் செயல்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## 2.3 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள்:

நுகர்வோர் கூட்டுறவுகளில், தொடக்க நிலையில் தொடக்கக் கூட்டுறவு

பண்டகசாலைகள் செயல்படுகின்றன. தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள் அத்தியாவசிய நுகர்பொருட்களை நியாயமான விலையில் பொதுமக்களுக்கு வழங்குவதை நோக்கமாக கொண்டு செயல்படுகின்றன. இவை நியாய விலைக்கடைகள், சில்லறை விற்பனை அங்காடிகள், பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள், மாவு அரவை அலகுகள், மசாலாப்பொருட்கள் அரவை அலகுகள் மற்றும் சீயக்காய் அரவை அலகுகள் ஆகியவற்றையும் நடத்தி வருகின்றன.

தமிழ்நாட்டில், 369 தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் செயல்பட்டு வருகின்றன. தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள், 52 கூட்டுறவு மருந்தகங்கள், 18 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் 3 பெட்ரோல் மற்றும்

டீசல் விற்பனை நிலையங்கள் ஆகியவற்றை நடத்தி வருகின்றன.

### 3. நுகர்வோர் கூட்டுறவுகளின் செயல்பாடுகள்

மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், நுகர்பொருட்களை உற்பத்திமையங்கள், தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஆகியவற்றிடமிருந்து நேரடியாக மொத்தமாகக் கொள்முதல் செய்கின்றன. மேலும், கூட்டுக் கொள்முதல் குழு மூலமும் மொத்தமாகக் கொள்முதல் செய்து, நுகர்வோருக்கு நியாயமான விலையில் விற்பனை செய்து வருகின்றன.

அனைத்து நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் **2020-21 ஆம்** ஆண்டில், கட்டுப்பாட்டுப் பொருட்கள் மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்கள் **ரூ.2768.53 கோடி** மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. அனைத்து

நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் 2021–22 **ஆம்** ஆண்டில், 31.07.2021 வரை **ரூ.1014.77 கோடி** மதிப்பிற்கு கட்டுப்பாட்டுப் பொருட்கள் மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் 2020–21–ஆம் ஆண்டில், **ரூ.611.88 கோடி** மதிப்பிற்கு கட்டுப்பாட்டுப் பொருட்களையும், **ரூ.1014.40 கோடி** மதிப்பிற்கு கட்டுப்பாடற்ற பொருட்களையும் விற்பனை செய்துள்ளன. மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் **2021–22–ஆம்** ஆண்டில், 31.07.2021 வரை **ரூ.269.70** கோடி மதிப்பிற்கு கட்டுப்பாட்டுப் பொருட்களையும், **ரூ.303.39** கோடி மதிப்பிற்கு கட்டுப்பாடற்ற பொருட்களையும் விற்பனை செய்துள்ளன.

தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள், **2020-21-ஆம்** ஆண்டில், **31.03.2021 வரை ரூ.109.97 கோடி** மதிப்பிற்கு கட்டுப்பாட்டுப் பொருட்களையும் **ரூ.277.96 கோடி** மதிப்பிற்கு கட்டுப்பாடற்ற பொருட்களையும் விற்பனை செய்துள்ளன. தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள், **2021-22-ஆம்** ஆண்டில், **31.07.2021** வரை **ரூ.52.08** கோடி மதிப்பிற்கு கட்டுப்பாட்டுப் பொருட்களையும் **ரூ.80.09 கோடி** மதிப்பிற்கு கட்டுப்பாடற்ற பொருட்களையும் விற்பனை செய்துள்ளன.

## 4. கூட்டுறவு மருந்தகங்கள்

தற்போது, தமிழ்நாட்டில், **304** கூட்டுறவு மருந்தகங்கள், தரமான மருந்துகளை, குறைவான விலையில் பொதுமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு நிறுவனங்கள்,

இம்மருந்தகங்களில் 20 விழுக்காடு வரை தள்ளுபடி அளித்து மருந்துகளை விற்பனை செய்வதன் மூலம் ஏழை, எளிய, அடித்தட்டு மக்கள் சேமிப்பதற்கு உதவுகின்றன.

தொடங்கப்பட்டது முதல் 31.03.2021 வரை கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் 300 மருந்தகங்கள் மூலம் ரூ.1124.53 கோடி மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

2021-22-ஆம் ஆண்டில், 31.07.2021 வரை கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் 304 மருந்தகங்கள் மூலம் ரூ.52.78 கோடி மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

# இயல் – IV
# சிறப்பு நோக்கங்களுக்கான கூட்டுறவு நிறுவனங்கள்

## முன்னுரை

விவசாயிகள், மலைவாழ்மக்கள் மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு, சிறப்பு வகை கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் இத்தகைய மக்களுக்கு சிறப்பு சேவைகளை வழங்கி வருகின்றன.

## (i) பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்

மலைவாழ் பழங்குடியினர் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதையே முக்கியமாக கொண்டு தற்போது தமிழகத்தில் 24 பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள்

பழங்குடியினருக்கு பயிர்க்கடன் வழங்குதல், நுகர்வோர் கடன் வழங்குதல், வேளாண் இடுபொருள் விநியோகம், வேளாண் விளைப் பொருள் விற்பனை, சிறுவனப் பொருட்கள் சேகரிப்பு மற்றும் விற்பனை, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் அரசு நிதியுதவி அளித்து வருகின்றது. இச்சங்கங்கள் பழங்குடியின உறுப்பினர்களுக்கு சாகுபடிக்கென குறுகிய கால பயிர்க்கடன்களையும் வேளாண் சார்ந்த நடவடிக்கைகளுக்காக மத்தியக் கால கடன்களையும் வழங்கி வருகின்றன. 2020-21 ஆம் ஆண்டில் பெரும்பல நோக்கு

கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.221.09 கோடி அளவிற்கு புரள் வணிகம் செய்துள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.266.89 கோடி அளவிற்கு புரள் வணிகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் (31.07.2021 வரை) பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.15.04 கோடி அளவிற்கு புரள் வணிகம் செய்துள்ளது.

**(ii) தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒப்பந்தப்பணிகள் மூலம் வேலை வாய்ப்பினை வழங்கி அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, 18,723 உறுப்பினர்களுடன் 53 தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.**

### (iii) துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் லிட்., (TUCAS)

துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் (TUCAS) கோயம்புத்தூர் மாவட்டம், துடியலூரில் 1955 ஆம் ஆண்டு முதல் சிறப்பு வகை தொடக்க விவசாய கூட்டுறவுச் சங்கமாக செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் வேளாண் இடுபொருள்கள், பூச்சிகொல்லி மருந்து, வேப்பம்பிண்ணாக்கு, நுண்ணூட்டச் சத்து விதைகள், வேளாண் கருவிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்து விற்பனை மேற்கொண்டு வருகிறது. மேலும், 'அசோகா மார்க்' என்ற பெயரில் கலப்பு உரங்களை தயாரித்து தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்து வருகிறது.

விவசாய உறுப்பினர்களுக்கு பயிர்க்கடன், அடமானக்கடன், நகைக்கடன், தனிநபர் கடன், தொழில் முனைவோர் கடன், மகளிர் சிறு

வணிகக்கடன், ஆதிதிராவிடர் நலக்கடன் போன்ற கடன்களை வழங்கி வருகிறது.

2020–21 ஆம் ஆண்டில், ரூ.78.54 இலட்சம் மதிப்பிலான விதைகள், ரூ.181.60 இலட்சம் மதிப்பிலான பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் ரூ.25.23 இலட்சம் மதிப்பிலான வேளாண் உபகரணங்கள் விற்பனை செய்துள்ளது. 2021–22 ஆம் ஆண்டிற்கு, ரூ.350.00 இலட்சம் மதிப்பிலான விதைகள், ரூ.200.00 இலட்சம் மதிப்பிலான பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் ரூ.110.00 இலட்சம் மதிப்பிலான வேளாண் உபகரணங்கள் விற்பனை செய்வதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டில் (31.07.2021 வரை) ரூ.46.19 இலட்சம் மதிப்பிலான விதைகள், ரூ.143.01 இலட்சம் மதிப்பிலான பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் ரூ.2.61 இலட்சம் மதிப்பிலான வேளாண்

உபகரணங்கள் விவசாயிகளுக்கு விற்பனை செய்துள்ளது.

### (iv) கூட்டுறவு அச்சகங்கள்

தமிழ்நாட்டில் 26 கூட்டுறவு அச்சகங்கள் 11797 உறுப்பினர்களுடனும் ரூ.2.70 கோடி பங்குத் தொகையுடனும் செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு நிறுவனங்களின் அச்சுத் தேவையை இவை பூர்த்தி செய்கின்றன. மேலும், அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து அச்சுப் பணி ஆணைகளைப் பெற்று நிறைவேற்றி வருகின்றன. 2020-21 ஆம் ஆண்டில், கூட்டுறவு அச்சகங்களின் புரள் வணிகம் ரூ. 57.12 கோடியாக உள்ளது. 2021 - 22 ஆம் ஆண்டில் (31.07.2021 வரை) கூட்டுறவு அச்சகங்களின் புரள் வணிகம் ரூ.14.95 கோடியாக உள்ளது.

கூட்டுறவு அச்சகங்களை தன்னிறைவு பெற்ற நிறுவனங்களாக செயல்பட வைக்க பல்வேறு முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அனைத்து வகையான அச்சுப்பணிகளையும் கூட்டுறவு அச்சகங்களின் மூலம் நிறைவேற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பெரும்பான்மையான கூட்டுறவுச் சங்கங்கள் கணினிமயமாக்கப்படுவதைத் தொடர்ந்து கூட்டுறவு அச்சகங்களில் கணினி எழுதுபொருள் மற்றும் அச்சிடப்பட்ட படிவங்கள் தயாரிக்கும் வசதியினை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். 2021-2022ஆம் ஆண்டிற்கு ரூ. 91.69 கோடி வணிக குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# இயல் – V

# பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு

## முன்னுரை

**1.1.** அனைவருக்கும் உணவு பாதுகாப்பினை உறுதிசெய்வதில் பொதுவிநியோகத் திட்டம் முக்கிய பங்காற்றுகிறது. தமிழகத்தில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்துவதில் கூட்டுறவு நிறுவனங்கள் பெரும் பங்காற்றி வருகின்றன. 23,503 முழுநேரக் கடைகள் மற்றும் 9,565 பகுதிநேரக் கடைகள் என மொத்தம் 33,068 நியாயவிலைக்கடைகளுடன் பரவலான விநியோக தொடரமைப்பை கூட்டுறவுகள் கொண்டுள்ளன. இது மாநிலத்தில் செயல்படும் மொத்த நியாயவிலைக் கடைகளான 34,773 இல் 95.09% ஆகும். 31.07.2021–இன் படி விவரம் கீழ்க்கண்டவாறு:

| வ. எண் | கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள் | நியாய விலைக்கடைகளின் எண்ணிக்கை (31.07.2021) |
|---|---|---|
| 1. | மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை | 3,377 |
| 2. | கூட்டுறவு விற்பனைச் சங்கம் | 2,538 |
| 3. | பிரதம கூட்டுறவு பண்டகசாலை | 1,919 |
| 4. | தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் | 24,413 |
| 5. | நகர கூட்டுறவுக் கடன் சங்கம் | 498 |
| 6. | பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் | 239 |
| 7. | இதர வகை கூட்டுறவுச் சங்கம் | 84 |
| | மொத்தம் | 33,068 |

அனைத்து பொதுவிநியோகத்திட்ட நியாயவிலைக் கடைகளின் சிறப்பான செயல்பாடுகள் மீது தமிழக அரசு தனி கவனம் செலுத்தி வருகிறது. நியாயவிலைக் கடைகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய அரசு தொடர்ந்து மானியம் வழங்கி வருகிறது.

1.2. அரிசி, கோதுமை, சர்க்கரை முதலிய அத்தியாவசியப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்யும் பணியை 27 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், 58 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், 10 பிரதம கூட்டுறவு பண்டகசாலைகள் மற்றும் 2 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஆகியவை உள்ளிட்ட 97 முதன்மைச் சங்கங்கள் மேற்கொண்டு வருகின்றன. இந்த முதன்மைச் சங்கங்கள் 4,162 இணைப்புச் சங்கங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்து வருகின்றன. இதைத்தவிர 9 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளும், 31 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், 150 பிரதம கூட்டுறவு

பண்டகசாலைகளும், 119 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும், 7 பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், 9 நகர கூட்டுறவுக் கடன் சங்கங்களும் மற்றும் 5 இதர வகை கூட்டுறவுச் சங்கங்களும், ஆக மொத்தம் 330 கூட்டுறவுச் சங்கங்கள் சுயஎடுப்பு சங்கங்களாக செயல்பட்டு வருகின்றன.

## 2. கூட்டுறவு நியாய விலைக் கடைகள்

அரிசி, சர்க்கரை மற்றும் கோதுமை ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்க ஏதுவாக, 33,068 நியாயவிலைக்கடைகளை நடத்துவதுடன், அத்தியாவசிய எரிபொருளான மண்ணெண்ணெயை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க ஏதுவாக, பிரத்யேகமாக 249 மண்ணெண்ணெய் வழங்கு

நிலையங்களையும் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தி வருகின்றன. **மேலும், சிறப்பு பொதுவிநியோகத்திட்ட பொருட்களான துவரம் பருப்பு, பாமாயில் ஆகியவையும், நியாயவிலைக் கடைகள் மூலம் தமிழக அரசால் வழங்கப்படும் மானிய விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.** கட்டுப்பாடற்ற பொருட்களான ஊட்டி தேயிலை, உப்பு போன்றவையும் நியாயமான விலையில் நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

### 3. நகரும் நியாய விலைக் கடைகள்

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகள் மற்றும் தொலைதூர பகுதிகளில் பல நகரும் நியாயவிலைக் கடைகள் மாவட்ட ஆட்சியரின் ஆணையின்படி செயல்பட்டு வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் 31 நகரும் நியாயவிலைக் கடைகள்

செயல்பட்டு, தொலைதூரத்தில் உள்ள பழங்குடியினர் வசிக்கும் பெரும்பாலான பகுதிகளுக்கு சென்று சேவை செய்து வருகின்றன. மேலும், நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் பொதுவிநியோகத்திட்ட நியாயவிலைக் கடைகளிலிருந்து சற்று தொலைவில் உள்ள பகுதிகளுக்கு, சேவை செய்ய பல நகரும் நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன.

## 4. நியாயவிலைக் கடைகளின் செயல்பாட்டினை கண்காணித்தல்

பொதுவிநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்கள் உரிய நேரத்தில், உரிய பயனாளிகளுக்கு,முழுமையாக சென்றடைவதனை நிகழ்நிலையில், கண்காணிக்கும் வகையில் நியாயவிலைக் கடைகளின் செயல்பாடுகள் அனைத்தும் முழுமையாக கணினி

மயமாக்கப்பட்டுள்ளன. அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் விற்பனை முனையக் கருவிகள் **(Point of Sale Devices - POS)** இணைக்கப்பட்டு கிடங்குகளில் சரக்கு இருப்புப் பதிவு முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுவது வரை அனைத்து பதிவுகளும் பதிவு செய்யப்பட்டு, அதன் மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம் நிகழ்நிலையில் கண்காணிக்கப்படுகிறது. தற்போது, பயனாளிகளின் கைரேகை பதிவு மூலம் 96%–க்கும் அதிகமான பொதுவிநியோகத்திட்ட பரிவர்த்தனைகள் நடைபெற்று வருகின்றன.

## 5. நியாயவிலைக்கடைகளில் தேங்கியுள்ள காலிக்கோணிகளை எம்.எஸ்.டி.சி. நிறுவனம் வழியாக மின்னணு ஏலம் (e-auction) மூலம் விற்பனை செய்தல்

கூட்டுறவுத்துறையின் மூலம் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்வதன் மூலம் சேகரமாகும் காலிக்கோணிகளை "மாவட்ட காலிக்கோணி விற்பனைக்குழு" மூலம் விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் செப்டம்பர் 2017 முதல் அனைத்து நியாய விலைக்கடைகளிலும், தேங்கியுள்ள சணல் காலிக்கோணிகள், சம்பந்தப்பட்ட முதன்மை சங்கங்களில் சேகரிக்கப்பட்டு, காலிக்கோணி விவரங்கள் மத்திய அரசு நிறுவனமான MSTC (Metal Scrap Trade Corporation Ltd.,) வலைப்பக்கத்தில் (Portal)

பதிவேற்றம் செய்து, வெளிப்படைத்தன்மையுடன், MSTC நிறுவன மின்னணு ஏலப் பணித்தளத்தின் மூலம் (e-auction Platform) ஏலம் விடும் முறையினை நடைமுறைப்படுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் 31.07.2021 வரை 26,01,05,132 காலிக்கோணிகள் விற்பனையாகியுள்ளது.

## 6. இதர பொருட்களின் விற்பனை விவரம்

### (i) ஊட்டி தேயிலை விற்பனை விவரம்

இண்ட்கோசர்வ் (INDCOSERVE - The Tamilnadu Small Tea Growers' Industrial Cooperative Tea Factories' Federation Ltd.,) நிறுவனத்திலிருந்து ஊட்டி தேயிலை கொள்முதல் செய்யப்பட்டு பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ், கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 2021-22 ஆம் ஆண்டில் (31.07.2021 வரை)

**616 மெ.டன்** ஊட்டி தேயிலை விற்பனை செய்யப்பட்டுள்ளது. 2001-02-ம் ஆண்டு முதல் 31.07.2021 வரை **55,079 மெ.டன்** ஊட்டி தேயிலை கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**(ii) உப்பு விற்பனை விவரம்**

அயோடின் பற்றாக் குறையால் ஏற்படும் நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு, தமிழ்நாடு உப்பு நிறுவனத்திடமிருந்து, அயோடின் கலந்த உப்பு கொள்முதல் செய்யப்பட்டு, கூட்டுறவு சங்கங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. 2021-22ஆம் ஆண்டில் **5,168 மெ.டன்** உப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 2001-02 முதல் 2021-2022 (31.07.2021 வரை) **4,80,866 மெ.டன்** உப்பு கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 7. நியாயவிலைக் கடைகளை நடத்தும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அரசு மானியம்

கூட்டுறவுச் சங்கங்கள் சேவை மனப்பான்மையுடன் நியாயவிலைக் கடைகளை நடத்தி வருகின்றன. மேலும், விலையில்லாமல் அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலேயே குடும்ப அட்டைதாரர்களுக்கு பொதுவிநியோகத்திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்து வருகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்படும் விளிம்புத் தொகையுடன், கூட்டுறவுச் சங்கங்கள் பொதுவிநியோக திட்டத்தினை செயல்படுத்துவதால் ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்யும் பொருட்டு, அரசால் மானியம் வழங்கப்படுகிறது. 2020–21–ஆம் ஆண்டில் **ரூ.400.00 கோடி** கூட்டுறவு நிறுவனங்களுக்கு,

பொதுவிநியோகத் திட்ட மானியமாக அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

# இயல் – VI
# கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

## 1. முன்னுரை

கூட்டுறவு தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி முக்கியமானதாக உள்ளதோடு ஒட்டுமொத்த கூட்டுறவு இயக்கத்தின் வெற்றிக்கு இது உதவுகிறது. இதன் பொருட்டு, கூட்டுறவுக் கல்வி, பயிற்சி, விளம்பரம் மற்றும் பிரச்சாரப்பணிகளை மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்ட அளவில் 35 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் மேற்கொண்டு வருகின்றன. இவ்வொன்றியங்கள், உறுப்பினர் கல்வித்திட்டங்களையும், பொருட்காட்சிகள், கருத்தரங்குகள், கூட்டுறவு வார விழாக்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி,

கட்டுரைப்போட்டி ஆகியவற்றை ஏற்பாடு செய்து கூட்டுறவு இயக்கத்தினைப் பற்றி மக்களுக்கு எடுத்தியம்புகின்றன.

## 2. கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள்

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கீழ், தமிழ்நாட்டில் 20 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் மாணவர்களுக்கு 36 வார முழுநேர கூட்டுறவு பட்டயப் பயிற்சியை நடத்துவதுடன், கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு அஞ்சல் வழிக்கல்வி மூலம் கூட்டுறவு பட்டயப் பயிற்சியினையும் அளித்து வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் அனைத்து கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் குறுகியகாலப் பயிற்சிகளையும் நடத்தி

வருகின்றன. 2020–21 ஆம் ஆண்டில் 20 பயிற்சி நிலையங்களில் **3,736** மாணவர்கள் முழு நேரக் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், **1,764** பணியாளர்கள் அஞ்சல்வழி கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர். சமையல் கலை கைவினைஞர்களை உருவாக்கும் பொருட்டு, ஏழு கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களில் சான்றிதழுடன் கூடிய "சமையல் கலை கைவினைஞர் (பொது)" பயிற்சி அளிக்கப்படுகின்றது.

### 3. தொழிற் கல்வி

இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பை உருவாக்கும் பொருட்டு, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், தருமபுரி மாவட்டத்தில் பர்கூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை ஆகிய இரண்டு இடங்களில், கூட்டுறவுத் தொழிற்பயிற்சி

நிறுவனங்களை நடத்தி வருகிறது. இக்கூட்டுறவுத் தொழிற் பயிற்சி நிலையங்களில், கணினி தொழில்நுட்ப உதவியாளர் பயிற்சி, தையற்கலை, நகை மதிப்பீட்டாளர் பயிற்சி, மின் பழுதுபார்த்தல், சமையல் கலை கைவினைஞர் (பொது) பயிற்சி ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றது. 2020–21 ஆம் ஆண்டில் மேற்கண்ட இரு தொழிற்பயிற்சி நிறுவனங்களில் 111 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடியில் ஒரு கூட்டுறவுத் தொழில்நுட்பக் கல்லூரியையும் நடத்தி வருகிறது. இக்கூட்டுறவுத் தொழில்நுட்பக் கல்லூரியில், இயந்திரப் பொறியியல், கணினி பொறியியல், மின்சாரம் மற்றும் மின்னணு பொறியியல் ஆகிய மூன்று பட்டயப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. 2020–21 ஆம் ஆண்டில்

மேற்காணும் பட்டயப் பயிற்சிகளில் 200 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 4. கூட்டுறவு மேலாண்மை தொடர்பான உயர் பட்டயப் பயிற்சி மற்றும் குறுகியகாலப் பயிற்சி

தேசிய கூட்டுறவு பயிற்சிக் குழுமத்தால் (புதுடெல்லி), சென்னை மற்றும் மதுரையில் நடத்தப்பட்டு வரும் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், நிதி உதவி அளித்து வருகிறது. இவ்விரு நிலையங்களில் கூட்டுறவு மேலாண்மை உயர் பட்டயப்பயிற்சி நடத்தப்பட்டு வருவதுடன் வணிக மேலாண்மையியல் முதுகலை பட்டப்படிப்பும் (MBA) நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையங்களில், கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவு நிறுவனப் பணியாளர்களுக்கு குறுகியகாலப் பயிற்சிகளும் நடத்தப்படுகின்றது.

2020–21 ஆம் ஆண்டில் நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையம், சென்னையில் 25 குறுகிய காலப் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளது. இதில் 843 பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். கூட்டுறவு மேலாண்மை நிலையம், மதுரையில் 37 குறுகிய காலப் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளது. இதில் 1,410 பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

**5.பல்கலைக் கழகங்களில் கூட்டுறவு ஆராய்ச்சி**

கூட்டுறவில் ஆராய்ச்சி மேற்கொள்ள மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பெரியார் பல்கலைக் கழகம் மற்றும் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழகம் ஆகிய ஒவ்வொன்றிலும் ரூ.5.00 இலட்சத்தினை நிதிய

மூலதனமாக வைத்துள்ளது. இதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மூலம் கூட்டுறவு மற்றும் அதன் தொடர்புடைய இனங்களில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரை 25 ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ரூ.21.25 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**6. கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியின் பயன்பாடு**

கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் நிகர இலாபத்தில் 3 விழுக்காடு தொகையை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கு அளிக்கின்றன. இந்நிதி, கூட்டுறவு ஆராய்ச்சிக்கான மானியமாகவும் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்காக வட்டியில்லாக் கடனாகவும் வழங்கப்பட்டு

வருகிறது. இந்நிதியிலிருந்து விடுவிக்கப்படும் அனைத்து தொகையும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக் குழுவின் ஒப்புதலுடன் விடுவிக்கப்படுகிறது.

## 7. கூட்டுறவுக் கல்வி நிதியின் பயன்பாடு

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவுக் கல்வி நிதிக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் நிகர இலாபத்தில் 2 விழுக்காடு தொகையை வழங்குகின்றன. இந்நிதியிலிருந்து கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி, கூட்டுறவு பிரச்சாரம், கூட்டுறவு விளம்பரம் போன்ற பணிகளுக்கு கூட்டுறவுக் கல்வி நிதிக் குழுவின் ஒப்புதல் பெற்று நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும், துறை அலுவலர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சிகள் நடத்துதல், மாவட்டங்களில் உறுப்பினர்

கல்வித் திட்டம் மற்றும் இளைஞர் ஈர்ப்பு முகாம்கள் நடத்துதல் மற்றும் அகில இந்திய கூட்டுறவு வார விழாக்கள் கொண்டாடுதல் ஆகியவற்றிற்கு இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.

## இயல்– VII

## ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் (ICDP)

1. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் என்பது ஒரு மாவட்டத்திலுள்ள பல்வேறு கூட்டுறவு அமைப்புகளில் ஒருங்கிணைந்த வளர்ச்சியினை ஏற்படுத்துவதற்காக தோற்றுவிக்கப்பட்ட திட்டமாகும். இத்திட்டமானது மாநில அரசு மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழக நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.
2. தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழக ஆலோசனையின்படி, மாநில அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டத்தில்

இத்திட்டமானது ஐந்து ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படுகிறது.

3. தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டமானது, 1989–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, 28 மாவட்டங்களில் ரூ.467.90 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

4. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது, மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த முறையில் செயல்படுவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதனை குறிக்கோளாக கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

**5.** ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்திற்கான நிதிஉதவிகள், தமிழக அரசால் வழங்கப்பட்டு, தேசிய கூட்டுறவு

வளர்ச்சி கழகத்திடமிருந்து மறுநிதியாக பெறப்படுகிறது. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியானது திட்ட செயலாக்க முகமையாக செயல்படுகிறது. இத்திட்டத்திற்கான நிதி உதவி தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து தமிழக அரசுக்குக் கடனாக வழங்கப்பட்டு, தமிழக அரசிடமிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனாகவும், பங்குத்தொகையாகவும் வழங்கப்படுகிறது. விவசாய விற்பனைத் திட்டத்திற்கும், பதப்படுத்துதல் மற்றும் கிடங்கு, அலுவலக கட்டிடம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துகின்ற 'துணைத் திட்டங்களில்' நலிவடைந்த பிரிவினருக்கு திட்டத் தொகையில் 15% தேசிய கூட்டுறவு

வளர்ச்சி கழகத்திடமிருந்து மானியமாகப் பெறப்படுகிறது.

6. தற்போது ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டமானது நாமக்கல், திருவள்ளூர், கன்னியாகுமரி மற்றும் சென்னை ஆகிய நான்கு மாவட்டங்களில் (31.07.2021 வரை) ரூ.293.57 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

7. 32 மாவட்டங்களில் இத்திட்டம் முதற்கட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ள நிலையில், தற்பொழுது விருதுநகர், இராமநாதபுரம், திருப்பூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கடலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 9 மாவட்டங்களில் இரண்டாம் கட்டமாக

செயல்படுத்துவதற்கான அரசு ஆணை வழங்கப்பட்டு, தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கை, இறுதி அனுமதி பெறுவதற்காக தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு அரசின் வழியாக அனுப்பப்பட்டுள்ளது.

# இயல் – VIII

## கூட்டுறவுத் தேர்தல்

தமிழ்நாடு அரசால் 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்தம்) சட்டம் 2012–இன்படி 33–A என்ற புதிய பிரிவு சேர்க்கப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்த தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டது. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, தேர்தல் ஆணையம் 08.02.2013 முதல் செயல்பட்டு வருகிறது.

அரசியலமைப்பு 97வது திருத்தச் சட்டம் 2011–இன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழுவில் ஒரு பட்டியல் வகுப்பு உறுப்பினரும் மற்றும் இரண்டு பெண் உறுப்பினர்களும் இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பெண்களுக்கான அதிகாரமளிக்கும் பொருட்டும், சமூக நீதியினை உறுதி செய்திடும் பொருட்டும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில், 2013ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் படி, தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழுவில் 18% பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கும் மற்றும் 30% பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் 2013–இல் 22,552 சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டு, 2,04,889 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

2013 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழுக்களின் 5 ஆண்டு பதவிக்காலம் முடிவுற இருந்த தருவாயில் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 பிற செயற்பதிவாளர்கள் ஆகியோரின் கட்டுப்பாட்டில் செயல்படுகிற 18,805 கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2018ல் நான்கு கட்டங்களில் தேர்தல் நடத்திட அறிவிப்பு வழங்கப்பட்டது. அவற்றுள் 18,249 சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டு நிர்வாகக்குழுவினர் பதவியேற்றுள்ளனர்.

ஐந்தாம் கட்டத்தில் நடைபெற வேண்டிய தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கான தேர்தல் திட்டம், தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்படவேண்டும்.

## இயல் – IX

## விலை நிலைநிறுத்தும் நிதி

தமிழ்நாடு அரசு, மக்கள் நலனை காக்கும் விதமாக, கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் சந்தை குறுக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள **ரூ.100 கோடியிலான விலை நிலைநிறுத்தும் நிதியினை** ஏற்படுத்தி உள்ளது. அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பருப்பு வகைகள், புளி, எண்ணெய், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலை அதிகளவில் உயரும்போது அவற்றைக் கொள்முதல் செய்து, கூட்டுறவுகளின் விற்பனை அலகுகள் மூலம் விற்பனை செய்வதன் மூலம் நுகர்வோருக்கு குறைந்த விலையில் பொருட்கள் கிடைக்கப் பெறவும், வெளிச்சந்தை விலையைக்

கட்டுப்படுத்தவும் விலை நிலைநிறுத்தும் நிதி பயன்படுத்தப்படுகிறது.

தேவைப்படும் நேரங்களில் விலை நிலைநிறுத்தும் நிதியினைக் கொண்டு சந்தைக் குறுக்கீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அத்தியாவசியப் பொருட்களின் விலை கட்டுப்படுத்தப்படுகிறது.

## முடிவுரை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிக்க தலைமையின் கீழும், தமிழக மக்களின் நல்லாதரவோடும், இத்துறை பொது மக்களுக்கு வழங்கும் சேவைகளின் தரத்தை மேலும் மேம்படுத்த தொடர்ந்து முயற்சி செய்யும்.

இம்மாநிலத்தில் கூட்டுறவு இயக்கத்தை மேலும் வலுவுள்ளதாக்கவும், இத்துறையின் பல்வேறு வகையான சேவைகளை பலதரப்பட்ட மக்களுக்கு கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக பல்வேறு வளர்ச்சி அளவுகளில் எடுத்துச்செல்ல இத்துறை தீர்மானித்துள்ளது.

**இ.பெரியசாமி**
**கூட்டுறவுத் துறை அமைச்சர்**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் அரசு சார்ந்த தன்னாட்சி நிறுவனங்களில் பணியாற்றி வருகின்ற அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சார்ந்துள்ள துறைகளின் சார்பில், முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ஒரு நாள் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், கூட்டுறவுத்துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் இதர தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள், மாவட்ட அளவில் செயல்படும் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் இதர கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் கிராம அளவில் செயல்படும் கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் 44,552 பணியாளர்களின் ஒரு நாள் ஊதியமாக ரூபாய் 4 கோடியே 27 இலட்சத்து 38 ஆயிரத்திற்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்கள் 19.6.2021 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 3.6.2021 அன்று தலைமைச் செயலகத்தில், 2,09,81,900 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா பாதிப்பு நிவாரண உதவித் தொகை இரண்டாம் தவணையாக 2 ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தையும், 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைக்கும் அடையாளமாக 10 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு இரண்டாம் தவணை நிவாரணத் தொகை மற்றும் மளிகைப் பொருட்கள் தொகுப்பினை வழங்கினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.6.2021 அன்று சென்னையில் ஆழ்வார்பேட்டை, நந்தனம் மற்றும் லாயிட்ஸ் காலனியில் அமைந்துள்ள 4 நியாய விலைக் கடைகள், என மொத்தம் 6 நியாயவிலைக் கடைகளுக்கு நேரில் சென்று, அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரணத் தொகை இரண்டாம் தவணையாக ரூ. 2,000 மற்றும் 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் வழங்கும் பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்தார். மேலும், நியாயவிலைக் கடை ஊழியர்கள் பொதுமக்களுக்கு காலதாமதமின்றி பொருட்களை வழங்கி, சிறப்பாக பணியாற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.




மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்கள் தலைமையில் சேலம் மாவட்ட கூட்டுறவுத்துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 29.7.2021 அன்று நடைபெற்றது.




தூத்துக்குடி மாவட்டத்தில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்கள் கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் தூத்துக்குடி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்க வளாகத்தில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் மூலம் ரூ. 70 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையத்தை புதிய பேருந்து நிலையம் அருகில் 11.7.2021 அன்று திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியின்போது, தூத்துக்குடி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் இதர கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 847 பயனாளிகளுக்கு (புதிய உறுப்பினர்கள் உட்பட) ரூ.4.86 கோடி மதிப்பிலான பயிர்க் கடன்கள், மாற்றுத் திறனாளிகளுக்கான கடன்கள், மகளிர் சுய உதவிக் குழு கடன்கள், சிறு வணிகக் கடன்கள் உள்ளிட்ட பல கடன்கள் வழங்கப்பட்டது.



சேலம் மாவட்டத்தில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்கள், டாக்டர் சுப்பராயன் சாலையில் உள்ள என்.ஜி.ஜி.ஓ. கூட்டுறவுப் பண்டகசாலையினை 29.7.2021 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



சேலம் மாவட்டத்தில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்கள், டாக்டர் சுப்பராயன் சாலையில் உள்ள என்.ஜி.ஜி.ஓ. கூட்டுறவுப் பண்டகசாலையினை 29.7.2021 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.




கே.கே.353, அரசம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், அரசம்பட்டி
பகுதி நேர நியாய விலைக்கடை




நகரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடை, பெரம்பலூர் மாவட்டம்




கே 910, பொள்ளாச்சி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச்சாலை, பொள்ளாச்சி.